ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2034/35 - 2017 සැප්තැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2017.09.01

*2034/35 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 4/81* (XII)

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்**

*23 ய ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 51 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23 ய என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளைத் தடைசெய்து, அட்டவணை* II *இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களிற்கு விலக்களிக்கின்றேன்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சனாதிபதி.*

கொழும்பு,
*2017, ஓகத்து 30.*

**அட்டவணை** I

செயற்பாடுகள் :

(i) நாட்டின் பயன்பாட்டுக்கென உயர் அடர்த்தி பொலிஎத்திலினை மூலப்பொருளாகக் கொண்டு ஆக்கப்பட்ட ஏதேனும் பையை உற்பத்தி செய்தல் ; அத்துடன்

(ii) நாட்டினுள் உயர் அடர்த்தி பொலிஎத்திலினை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் பையை விற்பனை செய்தல், விற்பனைக்காக முன்வைத்தல், இலவசமாக வழங்குதல், காட்சிப்படுத்தல் அல்லது பயன்படுத்துதல் ; அத்துடன்

இவ்வட்டவணையின் நோக்கங்களுக்காக உயர் அடர்த்தி பொலிஎத்திலினை மூலப்பொருளாகக் கொண்டு ஆக்கப்பட்ட பைகள் என்பது, உற்பத்திப் பொருட்கள் அல்லது பண்டங்களை கொண்டுசெல்லும் நோக்கத்துக்காக கைப்பிடிகளுடனான அல்லது கைப்பிடிகளற்ற ஏதேனும் பரிமாணத்திலான பைகளை உள்ளடக்குமென்பதுடன் பொதுவாக "சிலி-சிலி பைகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும் பலசரக்குப் பைகளையும் உள்ளடக்கும்.

1A - PG 3678 — 5007 (2017/08)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை II

விலக்களிக்கப்பட்ட விடயங்கள் :

(1) பின்வரும் பரிமாணத்தில் அல்லது அதற்கு மேலான பரிமாணத்திலான குப்பைக்கான பைகள் :

*நீளம் - 600 மிமீ*
*அகலம் - 260 மிமீ*
*உயரம் - 900 மிமீ*

(2) பின்வரும் பரிமாணத்தில் அல்லது அதற்கு மேலான பரிமாணத்திலான புடைவைப் பை :

*நீளம் - 400 மிமீ*
*உயரம் - 500 மிமீ*

*9-363*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.